## தினசரி சந்தை நிலவரம் - வெற்றிக் கதை



**ஆர். விஜயகுமார்,**
**காய்கறிமொத்த விற்பனையாளர்,**
**திருச்சி சந்தை.**
**தொலைபேசி: 9944550243.**

---

**அறிமுகம்:**

என் பெயர் ஆர். விஜயகுமார். நான் உள்ளூர் காய்கறிகளை கடந்த 6 வருடங்களாக மொத்த வியாபாரம் செய்து வருகிறேன். முதன்முதலில் நான் காய்கறிகளை மதுரை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மற்றும் மேட்டுப்பாளையம் போன்ற ஊர்களில் வாங்கி திருச்சி மற்றும் அதன் அருகாமையிலுள்ள சந்தைகளில் விற்று வந்தேன்.

**சந்தை நிலவரம்:**

தினசரி சந்தை நிலவரம் எனக்கு மிகவும் உதவியாக உள்ளது. ஏனென்றால் நான் காய்கறிகளை நிறைய சந்தைகளில் வாங்கி வருகிறேன். முதலில் எனக்கு வேறு இடங்களில் உள்ள காய்கறிகளின் விலை தெரியாது. ஆனால் எனக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் தினசரி சந்தை நிலவரங்களின் உதவியின் மூலம் மதுரை, ஒட்டன்சத்திரம், மேட்டுப்பாளையம் மற்றும் பெங்களூர் சந்தைகளின் விலை நிலவரங்களை அறிய முடிகிறது. தினசரி சந்தை நிலவரங்களின் பயன்களை நான் அறிந்த பிறகு எனக்கு காய்கறிகளை எங்கே, எப்படி, எப்பொழுது வாங்கலாம் என்ற விபரங்கள் ஏற்பட்டுள்ளது.

நான் சில காய்கறிகளை கும்பகோணத்திலும், உள்ளூர் சந்தைகளிலும் மிகவும் அதிக விலை கொடுத்து வாங்குவதாக உணர்ந்துள்ளேன். பிறகு நான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் இணையதளம் மூலம் தினசரி சந்தை நிலவரங்களை ஆராய்ந்து இப்பொழுது மதுரை, ஒட்டன்சத்திரம், மேட்டுப்பாளையம், ஒசூர் மற்றும் பெங்களூர் சந்தைகளில் குறைந்த விலையில்

என்னால் வாங்க முடிகிறது. அதன் மூலம் நான் அதிக லாபத்தை ஈட்டியுள்ளேன். நான் காய்கறிகளை லாபகரமான விலையில் வாங்க தினசரி சந்தை நிலவரம் எனக்கு மிகவும் உதவியாக உள்ளது.

**வரும்காலங்கள்:**

பின் வரும் காலங்களில் நான் என்னுடைய வியாபாரத்தையும் காய்கறி வகைகளையும் அதிகமாக்க எண்ணியுள்ளேன். அனைத்துப் பெருமைகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தினசரி சந்தை நிலவரம் பணிகளையே சாரும். எங்களைப்போன்ற சிறு மற்றும் மொத்த வியாபாரிகள் இணைய தளத்தின் மூலம் தமிழ்நாடு மற்றும் மற்ற மாநிலங்களின் விலை நிலவரத்தை அரிவதால் பயனடைகிறார்கள். இணையதளத்தின் மூலம் இத்தகைய தகவல்களை வழங்குபவர்களினால் என்னைப் போன்ற சிறு வியாபாரிகளுக்கு மிகவும் உதவிகரமானதாக அமைகிறது. எனது நெஞ்சார்ந்த நன்றியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழற்கும் தினசரி சந்தை நிலவரத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.